www.padippakam.com

# இலங்கையில் ராணுவம் அட்டகாசம்: தமிழ் இளைஞர்கள் படுகொலை

**சென்னை, ஜூலை, 20— யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டு ராணுவம் முற்றுகையிட்டுள்ளது. சந்தேகப் படும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு கொடுமைப் படுத்தப் படுகிருர்கள்.**

கடந்த 11-ம் தேதி இலங்கை அரசு யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதி மாவட்டத்தில் அவசர நிலை பிரகடனம் செய்தது தெரிந்ததே.

இலங்கையில் தனிநாடு கேட்டுப் போராடிவரும் தமிழர்கள் கொரில்லா தாக்குதலில் ஈடுபட்டார்கள் என்றும் 15 அதிகாரிகளும் மற்றும் சிலரும்கொல்லப்பட்டதற்கு தீவிர வாத தமிழ் இளைஞர்களே காரணம் என்றும் அரசு அறிவித்தது.

வடபகுதியில் நடந்த வங்கி கொள்ளைகளுக்கும் பிரிவினை கோரும் தீவிரவாத இளைஞர்களே காரணம் என்று அரசு கருதுகிறது. நாட்டில் வன்முறைவராமல் தடுப்பதற்காக அவசர நிலை பிரகடனப்படுத்துவதாக ஜனதிபதி ஜெ. ஆர். ஜெயவர்த்தன அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து இலங்கையின் வடபகுதி ராணுவத்தால் முற்றுகையிடப்பட்டது. இலங்கையின் முப்படைத் தளபதி ரணதுங்கா தலைமை தாங்கி இராணுவ முற்றுகையிட்டுள்ளார்.

## அடக்குமுறை

வழக்குகளில் சம்பந்தப்பட்ட இளைஞர்களும் சந்தேகப்படும் இளைஞர்களும்சிவில் போலீசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கடுமையான ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப் படுவதாகத் தெரிகிறது.

விசாரணைக்கென அழைத்து செல்லப்பட்டவர்களில் இருவர் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாகி சுட்டுக் கொல்லப்பட்டு பாதை ஓரத்திலேயே போடப்பட்டுள்ளனர். இதனல் யாழ்ப்பாணத்தில் பதட்ட நிலை நிலவுவதாகத் தெரிகிறது.

இறந்து போன இருவரில் ஒருவர் கனகரத்தினம், விஸ்வசோதி இரத்தினம் (இன்பம்). இவர் இலங்கையில் நடந்த துரையப்பா கொலை வழக்கில் கைதாகி விடுதலை செய்யப்பட்டவர். நவாலியைச்சேர்ந்தவர். மற்றெருவர்வடலியடைப்

பல இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## தணிக்கை

இலங்கையில் பத்திரிகை தணிக்கை கடுமையாக அமலாக்கப்பட்டுள்ளது. பத்திரிகை குறிப்பு ஒன்றின்படி 1971-ம் ஆண்டு சிங்கள இளைஞர்கள் 15,000 பேர் கொல்லப்பட்டு செகுவரா இயக்கம் ஒடுக்கப்பட்டது போல் தமிழர்கள் இயக்கமும் ஒடுக்கப்படும் என்று தெரிகிறது.

டிசம்பர் மாத இறுதிக்குள் தனிநாடு கோரும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒடுக்கப் படும் என்று முன்பு ஜனதிபதி ஜெயவர்த்தன அறிவித்திருந்தார். இப்போதுள்ள நிலைமையில் அதற்கு முன்பே தமிழ் இளைஞர்கள் அழிக்கப்படுவார்கள் எனத் தெரிகிறது.

இலங்கை தலைநகர் கொழும்புவில் புத்த பிக்குகள் மாநாடு கூட்டி தனிநாடு கோரும் தமிழர் கட்சிகளை தடைவிதிக்கக் கோருவார்கள் எனத் தெரிகிறது.

படிப்பகம்